# யாழ்.நகரில் ஏற்பட்டகிலியை நிறுத்தினர் அரச அதிபர்

PERIODICALS DIVISION LIBRARY

★ பக்கங்கள் 8 விலை சதம். 40

ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 கார்த்திகை 20 முஹறம் 5 இதழ் 296
யாழ்ப்பாணம் புதன்கிழமை 6-12-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்குப்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.



மீண்டும் ஒரு 77ம் ஆண்டுச சம்பவம் நிழ்ந்து விடுமோ என்று யாழ் நகரமக்களை கிலி கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை நேற்றிரவு சுமார் ஏழு மணியளவில் யாழ்ப்பாணம் பெரியகடைப் பகுதியில் ஏற்

(8-ம் பக்கம் பார்க்க)

# படுகொலை! பயங்கரக்கொள்ளை!

# இரண்டு பொலிசார் பலி; 10லட்சம் அபேஸ்!

## யாழ்.திருநெல்வேலி மக்கள்வங்கியில் சம்பவம்

### அனுதரவானநிலையில் இணுவிலில் கார், பொலிசார் தீவிரவேட்டை

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் படுகொலையும் பயங்கரக்கொள்ளையும் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சந்தியிலுள்ள மக்கள் வங்கிக்கிளையில் நடந்துள்ளது. இச்சம்பவம் பெரும் பரபரப்பையும் திகிலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

வங்கியிலிருந்து பத்துலட்சத்து எண்பதினாயிரம் ரூபாய் வரை கொள்ளை அடித்துச்செல்லப்பட்டதுடன் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டனர்.

கொள்ளையடிக்கப்பட்ட வங்கியிலேயே ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உடல் முழுவதும் துப்பாக்கிச சன்னங்கள் துளைக்கப்பட்ட நிலையில் இரத்தவெள்ளத்தில் துடிதுடித்து மாண்டு கிடக்கக்காணப்பட்டார். மற்றொரு கான்ஸ்டபிள் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்படும்போது வழியில் மரணமானார்.

துப்பாக்கியுடன் 2 ரிசேர்வ் பொலிஸாரும் அங்கு காவலாக நின்றனர். அச்சமயம் திடீரென நான்கு இளைஞர்கள் வந்து

(8-ம் பக்கம் பார்க்க)

### ஆபத்தான நிலையில்

மற்றுமொரு பொலிஸ் கான்ஸ்டபிள் துப்பாக்கிச்சூட்டுக்காயத்துடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்தப் பயங்கரக் கொலையிலும் கொள்ளையிலும் நான்கு இளைஞர்கள் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆயுதமின்றி இந்த இளைஞர்கள் வங்கிக்கு வந்ததாகவும், அங்கு நின்ற பொலிசாரின் ஆயுதங்களைப் பறித்துப் பொலிசாரை சுட்டுவிட்டு அந்த ஆயுதங்களுடனும் பணப்பைகளுடனும் தலைமை அலுவலகத்துக்குப் பணத்தை எடுத்துச் செல்லவிருந்த அதே மோட்டார்காரில் தப்பிச்சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

### காரைக்காட்டில் கார் நின்றது

படுகொலையும், பயங்கரக் கொள்ளையும் நடந்த சிலமணி நேரத்துக்குள் கொள்ளையரும் கொலைகாரரும் பணத்துடன் தப்பிச்சென்ற மோட்டார் கார் இணுவிலில் காரைக்காடு என்னும் இடத்தில் அனாதரவான நிலையில் கிடக்கப்பொலிசார் கண்டனர். அந்தக் காரில் சென்றவர்கள் அவ்வழியால் வந்த இருவரின் சைக்கிள்களைப் பறித்துச்சென்றதாகவும் அந்தச் சைக்கிள்களும் சிறிது தூரத்துக்கப்பால் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### பொலிஸ்மா அதிபர் வந்தார்

திருநெல்வேலியில் மக்கள்வங்கிக்கிளையில் நடந்த கோரக் கொலை பற்றியும் பயங்கரக் கொள்ளை பற்றியும் தகவல் கிடைத்ததும் பொலிஸ் மா அதிபர் திரு. அனசெனிவிரத்னவும் மற்றும் உயர்தரப் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றும் விசேஷ விமானத்தில் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து திருநெல்வேலிக்கும் ஆஸ்பத்திரிக்கும் சென்று பார்த்ததுடன் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்தாலோசனையும் நடத்தியது.

கொலை கொள்ளையைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பல இடங்களிலும் வாகனங்கள், வீடுகளும் சோதனையிடப்பட்டதாகத் தெரிகிறது.

### மாண்டபொலிசார் இவர்கள்

பொலிஸ் கான்ஸ்டபிள் சிங்ஸ்லி பெரேரா (11069), ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள் சுச்சிதானந்தன் (4943) ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். மற்றொரு ரிசேர்வ் பொலிசாரான ஜெயரத்தினம் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர் உடனடிச் சத்திரசிகிச்சைக்குள்ளானார்.

மக்கள் வங்கியிலிருந்து 3 பைகளில் பணத்தைப் பிராந்திய தலைமை அலுவலகத்துக்கு ஆயுதப் பொலிஸ் பாதுகாப்புடன் காலை 10-30 மணியளவில் ஈ வை 3852 இலக்க சோமசெட் காரில் எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

### பைகளை ஏற்றினர்

வங்கி உதவி முகாமையாளர் சேனாதிராசா, வங்கி ஊழியர் ராஜ்குமார் ஆகியோர் 3 பை பணத்தை சண்முகராஜா என்பவரின் சோமசெட் காரில் ஏற்றிக்கொண்டிருந்தனர். யந்திர துப்பாக்கியுடன் பொலிஸ் கான்ஸ்டபிளும்,

## ஜனாதிபதி சனியன்று மட்டுநகர் செல்கிறார்

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா எதிர்வரும் சனிக்கிழமை சூறாவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

ஹெலிகொப்டரில் செல்லும் ஜனாதிபதி பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று கிராமவாசிகளுக்கு ஆறுதல் கூறி நிவாரணம் பற்றி அவதானிப்பார். (உ)

## சுருட்டுத் தொழிலாளர் ஒருநாள் கூலி வழங்குவர்

[யாழ்ப்பாணம்]

சுருட்டுத் தொழிலாளர்கள் தமது ஒரு நாள் கூலியைக் கிழக்கு மாகாணத்தில் சூறாவளியாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவர். அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களே தமது ஒரு நாள் கூலியை வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்.

இச்சங்க உறுப்பினர்கள் எந்தெந்தப் பகுதியில் வசிக்கிறார்களோ அவ்வப்பகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைகளிடம் தமது பங்களிப்பை வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் திரு. ஆர் துரைராஜசிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ]அ[

## சமையல் பாத்திரம் வாங்க ரூ.100 உதவி

### ரூ 300 உடன் நிவாரணம்

[கொழும்பு]

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள குடும்பங்களுக்கு முன்னூறு ரூபாய் வீதம் உடனடி நிவாரண உதவிப்பணம் வழங்குமாறும் இப்பணத்தை இயம தடவைகளில் கிடைக்குமுன் வழங்குமாறும் சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணாரத்தின உத்தரவிட்டிருக்கிறார்.

உடனடி நிவாரண உதவித் தொகையை 750 ரூபாயாக அதிகரிப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை அமைச்சர் கோரியிருக்கிறார்.

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் குழுக்கள் அமைத்து சூறாவளி, வெள்ளச் சேத

[8-ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்
உதைபந்தாட்டப் போட்டி-1978
இறுதி ஆட்டங்கள்
இடம்: யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு
காலம்: வியாழக்கிழமை 7-12-1978 பி. ப. 2-15 மணி
3-ம் பிரிவு மகாஜன எதிர் மானிப்பாய் இந்து
2-ம் பிரிவு மகாஜன எதிர் யாழ் இந்து
4-15 மணி 1-ம் பிரிவு யாழ். இந்து எதிர் யூனியன்
பிரவேசம்: -/50சதம், பவிலியன் 1/- ஆசனம் 2/
0990

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உரும்பராய் தெற்கில் செல்லத்துரை வீதியில் 7 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்புகொள்ளவும். E. R முத்தையா உரும்பராய் கிழக்கு. 0973

22 ஸ்ரீ 5247 இலக்க மெசி பேர்குஸன் 35 டிராக்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி மாதவகுமார், றெயில் றோட், கொக்குவில். 0935

ஆடு, மாடு கோழிக்கு சிறந்த உணவாகிய இப்பில்-இப்பில் கன்றுகள் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த கட்டைவேலி, மெதடிஸ்த ஆலயத்தில் விற்பனைக்கு உண்டு. ஒரு கன்றின் விலை 25 சதம். 0980


## மீண்டும் அழிவு ஏற்படாதவாறு...

(கொழும்பு)

சூறாவளியினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும் போது எதிர்காலத்தில் இவ்வாறான அழிவுகள் ஏற்படாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

'யாழ். லீக்'கின்

## உதைபந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில், குருநகர் பாடும்மீன 'ஸி' பிரிவுக் கோஷ்டி, புனிதவளன் கழகத்தை 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தம் வகித்தார்.

பாடும்மீன் 'பி' பிரிவுக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பாடும்மீன் 4—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. குணரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

நாவாந்துறை சென். மேரிஸ் 'ஏ' பிரிவு, யுத்கார்மல் கழகத்தை 9—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எஸ். எம். புலநந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

### இன்றைய ஆட்டங்கள்

இன்றைய மோதலின் முதல் ஆட்டத்தில் சென் மேரிஸ் 'பி' பிரிவும் யாழ் முஸ்லீம்ஸ் கழகமும் மோதும். 2-வது மோதலில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகமும் பாஷையூர் சென். அன்ரனிஸ் 'ஏ' பிரிவும் மோதும்.

(அ)


## மரண அறிவித்தல்

திரு. செ. சண்முகம்

கலட்டி சீனியர் ஒழுங்கை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு. செல்லையா சண்முகம் சென்ற 23-ந் திகதி மட்டுநகரில் தமது மகளாரின் இல்லத்தில் காலமானார். ஈமக்கிரியைகள் மட்டுநகரிலே நடைபெற்றன. 0979

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/13278

சந்தையா திருநாவுக்கரசு,
தெல்லிப்பழை தென்மேற்கு. வழக்காளி
எதிராளி

1. சிவலை ஆசீர்வாதம், 2. சிவலை செபமாலை,
3. சிவலை இராசு, 4. சிவலை தருமு, 5. சிவலை மகள் நேசம்மா, 6 சீனிமுத்தன் பெண் ஞானம்மாவும்
7. அந்தோனிப்பிள்ளை பெண் ஆசைப்பிள்ளை எல்லோரும் வள்ளுவர்புரம், தையிட்டி, காங்கேசன்துறை
எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னர் விபரிக்கப்படும் காணியை 1979-ம் ஆண்டு தைமாதம் 10-ந் திகதி (10-1-1979) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 3451/71வும் மேலும் 2500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 11 வட்டி வதம் வழக்கு அணைக்கதிகதியாகிய 1972-ம் ஆண்டு ஆவணி மாதம் 05-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1973-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 637/42 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக்கோவிற்பற்று மயிலிட்டி இறை "இனம்மால்லை" நில பர. (32) முப்பத்திரண்டு. இதில் உறுதியின்படி நிந்தமாய் ஆட்சிபண்ணியபடி நில பர. 12 ஆறல் அளவின்படி நில பர 14 இதில் மேற்குப்புறமாக நில பர. (5) ஐந்து நீக்கி மிகுதியில் கிழக்குப்பக்கமாக நில. பர (9) ஒன்பதுக்கும் எல்லை கிழக்கு சிவலை செபமாலைக்கும், கதிரன் கந்தசாமிக்கும் உரியாதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு மாணிக்கம் அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் விக்ரோறியாவுக்கும் உரிய ஆதனம், தெற்கு சின்னப்பு கதிரேசுவிளுதனம் இதடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
16-11-78. 0981

கரைச்சிக் கிராமப் பிரதேசம். பரந்தன்

## கேள்வி விளம்பரம்

கரைச்சிக் கிராமப் பிரதேசத்தின் விசேட ஆணையாளரால் இதனடியில் தரப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் எதிர்வரும் 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 15-ம் திகதி காலை 10-00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். வைப்புப் பணமாக ரூபா 100/-ம், பத்திரப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தியதன் பேரில் நிர்வாகத்தினரால் 13-12-78-ந் திகதி பி. ப. 3-00 மணிவரைக்கும் வழங்கப்படவுள்ள உரிய பத்திரத்தில் அனுப்பப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை யாவும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலை விபரம்

1. தருமபுரம் குறுக்கு வீதி திருத்த வேலை.
2. புளியம்பொக்கணை வீதி திருத்த வேலை, மதவு கட்டுதல்.
3. ஜெயந்திநகர் கனகபுரம் வீதி, திருத்த வேலை, தார் ஊற்றுதல்.
4. ஜெயந்திநகர் குறுக்கு வீதி திருத்த வேலை தார் ஊற்றுதல்.
5. உருத்திரபுரம் குறுக்கு வீதி திருத்த வேலை
6. கண்டாவளை மடுக்கரை வீதி திருத்த வேலை.
7. தருமபுரம் கொல்கலம் திருத்துதல், பொது நிதி வேலை.
8. முரசுமோட்டைச் சந்தைக் கொட்டில் அமைக்கல். பொது நிதி வேலை.
9. வட்டக்கச்சி நூல் நிலையக் கட்டிடம் கட்டுதல். நன்கொடை.

க. சுப்பிரமணியம்
விசேட ஆணையாளர்
கரைச்சிக் கிராமப் பிரதேசம், பரந்தன்
1956

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி.

## கேள்வி விண்ணப்பம்

6 தொன் இசுசு (Isuzu) லொறி பொடி அடிப்பதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம், கைதடி" என்ற விலாசத்திற்கு 15-12-1978 வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபால உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை சங்கக் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி.
1978-12-04. 0985

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## 'நம் மூதாதையர் வலிமையுடன்திகழ விளையாட்டுகளே காரணம்''

(உடுப்பிட்டி)

''முற்காலத்தில் தமிழர்கள் சிறந்த வீரர்களாகவும் பராக்கிரமம் மிகுந்தவர்களாகவும் விளங்கினர். அவர்கள் காளை விரட்டல் போன்ற பயங்கர விளையாட்டுக்களில் ஈடுபட்டதால் உடல் வலிமையும் மனத்திட்பமும் பெற்று விளங்கினர். இளம் பராயத்திலிருந்தே விளையாட்டிலீடுபட்டு வந்தால் வீரத்தையும் சகிப்புத்தன்மையையும் சகோதரத்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்''

மேற்கண்டவாறு முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி கரணவாய் தெற்கு அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தினரின் மின்னொளியிலான ஐந்தாவது கரபந்தாட்டச் சுற்றுப் போட்டிப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

பருத்தித்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. எஸ். மாணிக்கராஜா பேசும்பொழுது பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே நட்புறவு நிலவவேண்டுமென்றும் இதற்கு விளையாட்டு மைதானங்களே வித்திடக்கூடியன என்றும் கூறினர்.

இச்சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் சாம்பியனாகியது. ஆறுபேர் கொண்ட போட்டியில் வல்வெட்டித்துறை குணசேகரா விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது (உ)


## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டம் நீதிமன்றம்

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டுளவச் சேர்ந்த காலஞ்சென்ற வெற்றிவேலு கந்தையா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்தினதும் உடமைப்பொருளினதும் விடயத்தில்

மரணமெய்தியவர் வயித்தியகலாநிதி குகநாகதாசன் கைம்பெண் தில்லைநாயகி, 82/6, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்

மனுதாரி

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3331

எதிராக

1. குகநாகதாசன் தயாநிதி
2. செல்லப்பா செந்தில்நாதனும்
3. [illegible] கலாநிதி
4. குகநாகதாசன் சாந்தநிதி (பராயமற்றவர்)
5. குகநாகதாசன ஜயநிதி
6. கேதீஸ்வரதாசன் இராதாகிருஷ்ணன்
7. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணகுமாரி (பராயமற்றவர்)
8. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணவதனி (பராயமற்றவர்)
9. கேதீஸ்வரதாசன் கிருஷ்ணனந்தா எல்லோரும் நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணசாதனமில்லாத மரணச்சொத்து நிர்வகிப்பதற்காக 3 மறுபடி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதி மூற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 24-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
ஒப்பம்
ம. சிதம்பரநாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.
0966

## லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்குஸ் காப்மொடல் (6 டொன் நிறை) லொறி ஒன்றிற்கு பொடி அடிப்பதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், கரைச்சிவடக்குபலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்" என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறி பொடி அடித்தல்" என எழுதப்பட்டு 15-12-78 நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

ஒப்பம்
தலைவர்.
பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்,
1978-12-02. 0974

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற கரவெட்டி கிழக்கு கந்தையா சிவகுரு என்பவரின் மரணச் சாதனச் சொத்து விடயத்தில்.

சிவகுரு கைம்பெண் பத்தினி கரவெட்டி கிழக்கு
— மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல:- 1057

எதிராக

1. கந்தையா நல்லதம்பி,
2. கந்தையா முருகேசு,
3. கந்தையா குமரகுரு
எல்லாரும்.
கரவெட்டி கிழக்கு
— எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் இதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979 ஆண்டு தைமாதம் 19-ம் திகதி காலை 9 மணிக்கு இந்த நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் திகதி.

வரைந்தவர்
சி. செல்லையா,
மனுதாரின் சட்டத்தரணி.
0983

ஈழநாடு
The Eelanaadu

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

புதிய பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் ஐந்து புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை ஏற்கனவே பல்கலைக்கழக வளாகங்களாக இருந்தவைதான் வளாகங்களாக இருந்தபோது ஒரே ஒரு உபவேந்தர்தான் இருந்தார் வளாகங்களின் தலைவர்கள் உபவேந்தரின் அனுமதிபெற்றே எதுவும்செய்ய வேண்டியிருந்தது.

இப்பொழுது பல்கலைக்கழகங்களாக இவை உருவாக்கப்படுவதால் அவை தமது விவகாரங்களைத் தாமே கவனித்துக்கொள்ளும் நிலையைப் பெறுகின்றன.

தமிழ்மக்களைப்பொறுத்தவரையில் 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முக்கியம் வாய்ந்தது

யாழ்ப்பாண வளாகம் முழுமைவாய்ந்த பல்கலைக்கழகமாகுமென்றும் அதன் முதல் உபவேந்தராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் நியமிக்கப்படலாமென்றும் சில மாதங்களுக்கு முன்னரே 'ஈழநாடு' முதல்பக்கத்தில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராகச் சிறப்புடன் பணியாற்றி வந்த பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் கல்வித்துறையில் நிறைந்த அனுபவமும் ஆற்றலுமுள்ளவர். கல்வித்துறையில் மட்டுமல்ல கலை, கலாசாரத்துறையிலும் அதிக ஈடுபாடுடையவர். தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவர். தமிழ் மக்களின் குறிப்பாகத் தமிழ்இளைஞர்களின்பிரச்சினைகளை நன்குணர்ந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை இதர நான்கு பல்கலைக்கழகங்களுடனும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாது

தகுதியிருந்தும் பல்கலைக்கழகக் கல்வி பெறமுடியவில்லையே என்ற மனக்குறை இன்னமும் தமிழ் இளைஞர் மத்தியில் நிலவுகிறது. விரக்தியுடைய ஒரு இளம் சமுதாயத்தை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்கவேண்டிய பெரும் பொறுப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் பல துறைகளிலும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. வைத்தியப் பிரிவு சமீபத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொறியியல் பிரிவும் விவசாயப் பிரிவும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பதவியேற்கும் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தனுக்குப் பெரும் பொறுப்பும கடமையுமிருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் அனுபவமும் ஆற்றலுமுள்ளவர்கள். பிற பல்கலைக்கழகங்கள் பெருமைப்படக்கூடிய அளவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்ந்துநிற்கிறது.

இந்த உயர்ச்சி மேலும் பலதுறைகளிலும் வளர்ந்து உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்வதற்குப் பொது மக்களும் இளம் தலைமுறையினரும், கல்விமான்களும்



கல்முனையிலும் மட்டக்களப்பிலும் இப்படியான கோரக்காட்சிகளையே இன்று காணலாம். சூறாவளியின் கோரத்தாண்டவத்தின் விளைவுகளில் இவை ஒருசிலவே. படம்: 'ரவி'

# ஆ! கடவுளே! ஊழிப் பெருந்தீயோ!

"ஓ, மை கோட்!"
-"ஆ; கடவுளே!"

அக்கரைப்பற்றைத் தாண்டி ஒரு சில மைல்கள். மட்டக்களப்பை நோக்கி நமது 'ஜீப்' வண்டி சென்றுகொண்டிருந்த போதே மன்னார் எம் பி திரு. சூசைதாசன் இப்படிக்கூறினார்.

உண்மையில் இதைவிட வேறு எவ்விதத்திலும் அக்கொடுமையினை வார்த்தையால் வர்ணிக்கலாமென்றுளைக்கத் தோன்றவில்லை.

நாமெல்லோரும் திகைத்துப்போய் பார்த்துக்கொண்டே இருக்க இப்படி வெகு நயமாக கூறினார் அவர்.

—நேரில் பார்த்தாலேயன்றி நினைத்தே பார்க்கமுடியாத கொடுமை அது!

நெருப்புக்குச்சியைசொட்டிவிட்டாற்போல சின்னபின்னமாக-அடியோடு விழ்ந்துகிடக்கும் தென்னைகள்; பாரிய மாங்கள்; வாழைகள்.

—'கரும்புத் தோட்டத்தில் யானைபுகுந்தாற்போல'-என்று இதனைக் கூறலாமா?

அப்படியானால், இன்றுகூட மீதமின்றி தரைமட்டமாகவும்-அரைவாசிக் கவாசுகளுடனும்-கூரையின்றியும் காட்சிதரும் வீடுகள்-கட்டடங்களை என்னவென்று சொல்வது?

போர் விமானங்களின் குண்டுவீச்சுக்கு இரையானவை என்பதா?

வீதிகளின் இருமருங்கும் வெட்டிக் குவிக்கப்பட்டிருக்கும் மரங்கள்நாட்டையேகாடாக்கிவிட்டனவா?

நிமிர்ந்து காணப்படும் ஒரு சில மரங்கள் கூட கருகிப்போக அங்கு காட்டுத்தீ பரவியதா?

— அக்கரைப்பற்றிலிருந்து பார்த்தால் வடக்கே கலகுடாவே செரிகிறதா?

எப்படிச் சொல்வது?

உணவுக்காக வாகனங்களின் வரவைப் பார்த்து, வீதிகளில் காத்திருக்கும் மக்களை என்னவென்று சொல்வது?

பூமியே அவர்களுக்குப் பாய்; வானமே அவர்களுக்குக் கூரை!

—இதுதான் அவர்களின் நிலை.

சில இடங்களில் முற்றக்கு வெயிலில் அடுப்பு புகைகிறது.

விழுந்துகிடக்கும் மரங்களின் கிளைகளில் உடும்பைப் குதியிருக்கிறது!

—ஒருவர் கூறினார்: 'மட்டக்களப்புப் பகுதிக்குச் சென்று வந்தால் மனிதன் மனிதனுவான்'-என்று

உண்மையேதான்!

—இரக்கமே இல்லாதவர்களுக்கு இரக்கம் பிறக்கும்.

அன்பு, கருணை என்னவென்று புரியும்!

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'-என்பார்களே.

விடவேண்டும்.


அது மிக அவசியம்; அவசரம்.

நமக்காகக் கடமைகள் இருக்கின்றன.

எவ்விதத்தில் முடியுமோ அவ்விதத்தில் நாம் உதவுவோம்.

உணவுக்காக— உடைக்காக— உறையுளுக்காக] அங்கு மக்கள் தவிக்கிறார்கள்

யார் என்ன கூறினாலும் நான் கண்டவற்றை என்னால் கூறமுடியும். அங்கு சகல மக்



கல்லடியில் சூறாவளியால் சாந்தி இழந்து நிற்கும் 'சாந்தி' படமாளிகை படம்:ரவி

—அதற்கு திருவாசகத்தை படிக்கவல்லவா வேண்டும்!

திருவாசகம் படிக்காவிட்டால் இப்போது மட்டக்களப்புக்குச் சென்றாலும் சரிதான்! நான் நினைக்கவில்லை, அந்தப் பரிதாபக் காட்சிகளைக் கண்டு உருகாத உள்ளமெதுவும் இருக்க முடியுமென்று.

ஆனை. அப்படி இருந்தால், ளுக்கும் உணவுசீராகக்கிடைக்கவில்லை, உடை கிடைக்கவில்லை.

அதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளன. அரசும், ஏனைய நிறுவனங்களும் அதைப்பார்த்துக் கொள்ளட்டும்.

ஆனால் மனழகாலம்.

அடுத்தமழை பெய்தால்...

இந்தப் பணிகளுக்காக நாம் எத்தனை பேர் அங்கு செல்லமுடியுமோ அத்தனை பேரும் செல்வோம்.

தாக்கமுற்று ஏக்கமடைந்துள்ள நம் மக்களுக்கு நாம் உதவுவோம்; ஆறுதல் அளிப்போம்.

[நாளை தொடரும்]

## நாது நிருபர் மாலி

அங்கும் சில மனிதாபிமான மற்ற செயல்கள் நடைபெற்றால் அவற்றைப்பற்றி என்னவென்று கூறமுடியும்?

சீர்குலைந்து" சின்னபின்னமாக்கப்பட்டிருக்கும் மட்டுநகருக்கும் மற்றைய இடங்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எம். பி.க்கள் நால்வருடன் நானும் சென்றுவந்தேன்.

என்று நிதங்சனாக நாம் அவ்விடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டோம்.

அப்போது நான் கண்டவற்றை- வாழ்க்கையில் எப்போதுமே கண்டிருக்காத- காணமுடியாத அவற்றை- நான் கேட்டவற்றை- அறிந்தவற்றை - என் எண்ணத்தில் எழுந்தவற்றை பரிதாபத்தை நடுவிலும் கண்ட கிருபையை முடிந்தவரை இங்குதர நான் முற்படுகிறேன்.

ஆனாலும், அவை முற்றுமுழுதாக அங்கு நடத்தியிருப்பவற்றை அப்படியே ஒரு போதும் உணர்த்தமாட்டா. இனத நானே— இப்போதே கூறிவிடமுடியும்.

அதற்கு முன்னதாக 'நன்றே செய்மின்; அதையும் இன்றே செய்மின்'—என்பார்களே.

ஒன்றை நான் இன்றேகூறி அவர்கள் கதி...?

...பாவம்!

அவர்களுக்கான புனர்வாழ்வு; அதுஒரு நீண்டகாலத் திட்டம்.

ஆனால், மழையிலிருந்து இப்போது தம்மைக்காக்க அவர்களுக்கு கிடுகு அங்கு மிகமிக அவசியம்.

இந்த விதத்தில் நாம் அனைவரும் அவர்களுக்கு இன்றே உதவுவோம்.

அத்தோடு, எத்தனையோ இடங்களுக்கு இன்னமுமே போகமுடியாதநிலை விதிகள் இன்னமும் முற்றாக சீராக்கப்படவில்லை.

—வீடு வளவுகளைத் துப்புரவாக்கவே மாதங்களாகும்.

## 'இளைஞரும் அபிவிருத்தியும்'

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவை மன்றமும், இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து 'இளைஞரும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றினை நடத்தவிருக்கின்றன.

யாழ். ட்றிமர் மண்டபத்தில் இன்று புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை இக்கருத்தரங்கு நடைபெறும்.

யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் சு வித்தியானந்தன், யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தேசிய இளைஞர் சேவை மன்றத் தலைவர் திரு ஷரித்த ரத்வத்த ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொள்வர்.

யாழ் வளாகப் புவியியல் துறைத் தலைவர் திரு சோ. செல்வநாயகம், பேராசிரியர் தா. சிவத்தம்பி உட்பட மற்றும் பலரும் இதில் பங்குபெறுவர்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சியில பரதநாட்டியம், குழந்தைகள் கலைநிகழ்ச்சி முதலானவை இடம்பெறும. (உ)

## மணிவாக்கு

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின் நமன் இல்லை"
—திருமூலர்

உபவேந்தருக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்குவார்களென்று எதிர்பார்ப்போம்.

## கொப்பிகள் தாராளமாக உள்ளன

[கொழும்பு]

சமீபத்திய சூறாவளியினால் வாழைச்சேனைக் கடதாசி ஆலை பாதிக்கப்பட்டிருந்தாலும் போதிய அளவு அப்பியாசக் கொப்பிகள் கையிருப்பிலிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## துண்டிமயான பரிபாலனசபை அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

துண்டி மயானத்தைப் பேணவும் முன்னேற்றவும் சைவமுறையில் ஈமக்கிரியைகள் செய்யவும் அதைப் பாவிக்கும் மக்கள் பாடுபட வேண்டும்' என்று கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் நடந்த துண்டி மயான பரிபாலன சபை அங்குராப்பணக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு தப்புகந்தையா கூறினார்.

சட்டத்தரணி சோ லோகேஸ்வரன் பேசுகையில் மக்களின் கடின உழைப்பும். ஒத்துழைப்புமிருந்தால் எமது முயற்சிகள் வெகு இலகுவில் கைகூடுமெனக் கூறினார்.

செயலாளர் திரு. ந நகுலேஸ்வரன் பேசுகையில் துண்டிககுடியேற்ற மக்களால் மயானத்துக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டுமெனக் கூறினார்.

உப-தபாலதிபர் திரு க. இராசசிங்கம், பரிபாலன சபைக்குரிய பணமான 300 ரூபாவை செயலாளரிடம் ஒப்படைத்தார். (க-அ)

# "வெளிநாட்டில் பெறும் விஞ்ஞான அறிவு தாயகத்துக்குப் பயன்பட வேண்டும்"

## ஜனாதிபதி வலியுறுத்துகிறார்

(கொழும்பு)

"இலங்கையில் இருந்து தமது கல்வியைப் பெற்றபின் விஞ்ஞான மேற்படிப்பின் பொருட்டு வெளிநாடு செல்லும் நம் மாணவர்கள் தமது தாயகத்திலேயே அதனை பயன்படுத்தவேண்டும்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன நேற்று காலை பண்டாரநாயகா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விஞ்ஞானத்துறை சம்பந்தப்பட்ட கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

ஜனாதிபதி தமது உரையில் மேலும் கூறியதாவது:

'ஏனைய நாடுகளுடன் போட்டா போட்டித் தேவையில்லை. சிலமொழிகளில் மட்டுமே முடிகிறது. எனவே தான் ஆங்கில மொழியை சிறுவயதில் இருந்தே போதிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

ஆனால் இத்திட்டம்முழுமை பெறமுடியாதிருப்பதற்கு ஆசிரியர், பற்றுக்குறையும் ஆங்கில நூல்கள் பற்றுக்குறையும் காரணங்களாக இருக்கின்றன

விஞ்ஞான நூல்களை அரசு இறக்குமதி செய்யவிருக்கும் அதே நேரம் வெளிநாடுகளில் நம் மாணவர் விஞ்ஞானக் கல்விபெற வசதி செய்து கொடுக்கும்.

பல்கலைக் கழகங்களுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப் பட்டுள்ளது விஞ்ஞானிகளை உருவாக்குவதில் பல்கலைக் கழகங்கள் முன்னிற்க வேண்டும்' (உ)

## யாழ். பஸ்நிலைய

# மலகூடம் உடனுக்குடன் துப்புரவு செய்யப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் உள்ள மலசல கூடம் உடனுக்குடன் துப்புரவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

கொழும்பு நகரத்திலுள்ள மலசல கூடங்களைப்போல் தினமும் இரு ஊழியர்கள் பஸ் நிலைய மலசல கூடத்தை உடனுக்குடன் துப்புரவுசெய்ய அமர்த்தப்பட்டுள்ளனர்.

காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் பிற்பகல் 2 மணிமுதல் இரவு 8 மணி வரை இவர்கள் கடமையாற்றுவார்கள்.

பொதுமக்கள் செய்த புகார்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-அ)

## சேருவில புனிதநகர்

(கொழும்பு)

சேருவிலவில் சிலபகுதிகள் புனிதநகராகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளன.

**ஓடுகள் வழங்கி**

சூருவளியினால் பாதிக்கப் பட்டபகுதிகளுக்கு நேரில் சென்று ஆராய்ந்து திரும்பிய ஜனாதிபதியின் விசேஷ குழு பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவு நிலைமை திருப்தியாக உள்ளதென்றும் ஆனல் ஓடுகள் மற்றும் இல்லங்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் தேவையென்றும் தெரிவித்துள்ளது.

**சரண்சிங் சந்திப்பு**

இந்தியாவின் முன்னாள் உள்நாட்டு அமைச்சர் சரண்சிங் தமது பதவியை ராஜினாமாச் செய்து மூன்று மாதத்தின்பின் இன்று பிரதமர் மொரார்ஜி தேசாயைச் சந்தித்து சுமார் அரைமணிநேரத்துக்கு மதிக்கமாகப்பேசிக் கொண்டிருந்தார்.

**பெண் மெம்பர் எங்கே?**

ராஜ்யசபை உறுப்பினரான செல்வி சரோஜா காப்பார்தி நேற்று சபைக்கு வராதிருந்த போது எதிர்க் கட்சியினர் பலத்த ஆட்சேபம் தெரிவித்தனர். பின்னர் பிற்பகலில் சபைக்கு வந்து சேர்ந்த செல்வி சரோஜா தாம்பீகாரிலும் டில்லியிலும் பொலிசாரால் துன்புறுத்தப் பட்டதாகத் தெரிவித்தார்.

ஃ

முன்னாள் இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் பன்சிலால தமதுபதவியைத் துஷ்பிரயோகம் செய்ததாக ஜகன் மோகன் ரெட்டி கமிஷன் குற்றம் சுமத்தியுள்ளது.

## "புயல், வெள்ளத்தால் அழிவுற்ற

# நகர்களைப் புனரமைக்க வெளிநாட்டு உதவிகளைக் கோர வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

சூருவளியால் தரைமட்டமாககப்பட்டுள்ள நகரங்களை மீள நிர்மாணிப்பதற்கு உலக நாடுகளின் உதவி கோரிப் பெறப்படல்வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணியகத்தில் 'சூருவளியால் அழிந்த தமிழ் ஈழத்தின் பட்டினங்களை மீள்விப்போம், புனரமைப்போம்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்குக்குதலைமைவகித்து உரை நிகழ்த்துகையில் முன்னாள் யாழ். மாநகர மேயர் டாக்டர் ச. அ. தருமலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"சாதாரணமாக வரவு செலவுத் திட்டங்களின் வரவுக்கும் செலவுக்கும் இடையேதுண்டுவிழும் தொகைகளைகுறை நிரப்புவதற்கு உலக நாடுகளின் பாரிய நிதி உதவிகளை எதிர்நோக்கும் இலங்கை இத்தகைய ஒருமாபெரும் அழிவைத் தானாகவே புனர் நிர்மாணம் செய்வமுடியுமென்று எண்ண முடியாது. அண்மையில் பூகம்பத்தினல் ஏற்பட்ட அழிவை செஞ்சீன வெளியார் உதவியின்றித் தனது சொந்தப் பொருள் பலத்தால் புனர்நிர்மாணம் செய்தமைதெரிந்ததே சீனவால் முடிந்தது ஏன் எம்மால் முடியாது என்று கேட்கும் நிலையில் இன்று நாம் இல்லை அதனால்தான் பல்வேறு நாடுகளாலும் அளிக்கப்பட்டுவரும் நிவாரண உதவிகளை மறுப்பின்றி நன்றியறிதலுடன் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு வருகிறது.

"அப்படிப் பொதுப்படையாக வந்துசேரும் உதவிகளை மறக்காது ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் தனித்தனி நாடுகள் ஏதாவது சூருவளியினால் அழிந்துபோயிருக்கக் கூடிய பட்டினங்களில் எவற்றையாவது முழுமையாகப் புனர்நிர்மாணம் செய்துதர முன்வரக்கூடும் அத்தகைய கோரிக்கை இலங்கை அரசாங்கத்தால் விடுக்கப்படல் வேண்டும் ஐ நா. ஸ்தாபனமும் அதன் சார்பு அமைப்புக்களும் ஏற்கனவே இங்கு சம்பவித்துள்ள அழிவின் அளவை கணிப்பெடுக்க முனைந்துள்ள காலகட்டத்தில் இத்தகைய கோரிக்கை விடுக்கப்படுமானல் சோஷலிச நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள், எண்ணைவளநாடுகள் முகாம்களில் இருந்து நடைமுறை சாத்தியப்படும் செயல்திட்டங்களுடன் சாதகமான வாக்குறுதிகள் கிடைக்கப்பெறலாம்

"முழுமையான அழிவுக்குள்ளாகியிருக்கும் மட்டக்களப்பு, கல்முனை, காத்தான்குடி, ஏருவூர், பொலனறுவை மின்னேரியா போன்ற நகரங்களையும், பகுதிகளையும் துரிதகதியில் புனர்நிர்மாணம் செய்வதற்கு இதைவிட்டால் வேறு வழி கிடையாது".

கருத்தரங்கில் இன்னும்பலர் உரை நிகழ்த்தினர். (கெ-அ)

## நல்லூர் விக்னேஸ்வராவுக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை முன்னாள் விரிவுரையாளர் திரு. கு. நேசையா நாட்டினார்.

இப்பாடசாலைக்குக் காணி வாங்கவும் கட்டடம் அமைக்கவும் யாழ்ப்பாண எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் நிதிஒதுக்கியுள்ளதாக திரு. நேசையா பேசுகையில் கூறினார்.

பின்தங்கிய கிராமத்திலுள்ள இப்பாடசாலை வளர்ச்சியடைந்து வருங் காலத்தில் ஒருதொழில் கல்லூரியாக வளரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளதாகவும் அவர்கூறினர்.

பாடசாலை அதிபர் திரு துரைச்சாமி வரவேற்புரை வழங்கினர் பெற்றோர் சார்பாக திரு. ஒஸ். ஏரம்பு நன்றி கூறினர். (க-அ)

## தொழில்நுட்ப மாணவர் உபகாரப்பணம்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்பநிறுவனத்தில் மாணவர்களுக்கான உபகாரப் பணம் வழங்கப்பட்டுள்ளது

இப் பணம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இம்முறை இப் பணத்தினைப் பெறுவதற்கு மொத்தம் 67 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 200 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. இப் பணம் மாணவர்களின் கல்வியைத் தொடர்ந்துபெறுவதற்கு கொடுத்து உதவப்படுகின்றது. இதைவிட இன்னும் இருவருக்கும் குறிப்பிட்ட ஒரு தொகைப்பணம் வழங்கப் பட்டுள்ளது. இது இவர்களுக்குபுலமைப் பரிசில்போன்று கொடுக்கப்படுகிறதாம். இப் பணத்தை இம்முறை இரண்டு யாண்விகளே பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் நிதி சேர்க்கும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க லிகிதர்சேவைச் சங்கம், சூருவளியிலும், வெள்ளத்திலும் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிதிசேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சங்க உறுப்பினர்களிடம் நிதி சேர்த்து அனுப்புமாறு கிளைகளுக்குத் தாய்ச்சங்கம் அறிவித்துள்ளதாக யாழ் கிளைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்

நிதி சேர்ப்பதற்சான பட்டியலும் கிளைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

கிழக்கு மாகாணத்திற்கு உணவுப்பொருட்களை விநியோகிக்க சங்கக்குழுவொன்று செல்லவிருப்பதாகவும் கூறினர். [க-அ]

## "மலையகத்தவர் வாழ்க்கைத்தரம் உயர்த்த நடவடிக்கை"

### லிந்துலவில் பிரதமர் உறுதி

(தலவாக்கல)

"மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன"

இவ்வாறு பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாஸ தலவாக்கல லிந்துலயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினர்

"சூருவளியால் அழிவுகள் உண்டாகியுள்ள போதிலும் நாம் கருத்துவேறுபாடுகளை மறந்து புதிய சுபிட்சமுள்ள இலங்கையைக் கட்டியெழுப வேண்டும்" என்று பிரதம மந்திரி தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

கிராமியச் சிறுகைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு காமினி திஸநாயகா உட்பட பலரும் பேசினர்கள். [உ]

## முல்லைத்தீவில் நிதிசேகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்திவு மாவட்ட வளர்ச்சிக் கழகம் கிழக்கு மாகாண நிதிசேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. டாக்டர் த. குணரத்தினம் சோமு செல்வரத்தினம் ஆகியோர் தலைமையில் ரூபா 10,000க்கு மேற்பட்ட தொகையை இக் கழகம் சேகரித்துள்ளது. (உ)

## மாநகரசபை வரவு-செலவு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையின் 79ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இம்மாதம் 15-ம் திகதி பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

வரவுசெலவுத் திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதாக விசேஷ ஆணையாளர் தெரிவித்தார். [க-அ]

# குழந்தையுடனிருந்த இளம் தாய் கோரக்கொலை

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ள கொடூரக் கற்பழிப்பு, கொலைச் சம்பவம் பொலிஸ் வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியையும், பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் தோற்றுவித்துள்ளது. இச் சம்பவத்தில் இளமதாய் ஒருவர் பயங்கரமாகக் கற்பழிக்கப்பட்டு பின் கோடரியால் வெட்டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

பொலிசார் இச் சம்பவம் பற்றி தெரிவித்ததாவது:- "சம்பவ தினத்தன்று வீட்டில் தனித்திருந்த ரூபங்கனி [வயது 2] என்ற பிரஸ்தாப இளம்பெண் தமது 5 மாதக் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிக் கொண்டிருந்த சமயம் திடீரென வீட்டினுள் மேற்படி காமுகக் கொலைஞன் புகுந்தான் பெண்ணைப் பலாத்காரமாகக் கற்பழித்தபின் அவரைக் கோடரியால் அவன் கோரமாக வெட்டிக்கொன்றுனும்

இக் கற்பழிப்புக் கொலையைச் செய்தபின்னர் அவன் 1,300 ரூபா பெறுமதிமிக்க துணிகளையும் திருடிக்கொண்டு தலைமறைவாகி விட்டானும். சந்தேகநபரான சிறிபால என்ற என்ற இப்பயங்கர வாதியைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர். [உ]

## கொக்குவில் வைத்தியசாலை அவலநிலை

[கோண்டாவில்]

கொக்குவில் வைத்தியசாலைக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இவ்வைத்தியசாலைக் கட்டிடச் சுவர்கள் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுகின்றன

கொக்குவில் வைத்தியசாலைக் கட்டிடத்தின் மருந்து கட்டும் அறைச்சுவர் வெடித்த நிலையில் காணப்படுகின்றது இத்துடன் பரிசோதனை அறைக்கு அண்மையில் உள்ள மண்டபம் கறையான் அரித்தெடுத்து காட்சியளிக்கின்றது

நோயாளர்கள் இருந்து வைத்தியரிடம் செல்வதற்குப் போதிய வாங்குகளும் இல்லை இதன் காரணமாக மருந்தெடுக்க வரும் நோயாளர்கள் வைத்தியரிடம் செல்வதற்கு முன்பு கால்கடுக்கநிற்கவேண்டியுள்ளது. ஒரு வைத்தியரே நோயாளர்களை பார்வையிட வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது [உ]

## "சி. பா. தமிழர் உரிமைகளைப் பாதுகாக்க

# நாடுதழுவிய மாநாடு கூட்டப்படவேண்டும்"

[அரியாலை]

சிறுபான்மைத் தமிழர்கள் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாக்கவும், பரவலாக வென்றெடுக்கப்படவேண்டிய உரிமைகளை வென்றெடுக்கவும் பரந்த பேரியக்கம் ஒன்றை அமைக்கவும் நாடுதழுவிய மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கியவாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர்களின் ஐக்கியத்தை வலுப்படுத்தும் நோக்குடன் அகிலஇலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் ஆதரவில் கூட்டப்பட்ட 3வது கருத்தரங்கில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

அகிலஇலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு எஸ் வி மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பொதுச்சபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டதுடன் செயற்குழுவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டது அகிலஇலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகாசபை, அகிலஇலங்கைத் திருவள்ளுவர் மகாசபை மனித உரிமை விடுதலை முன்னணி, இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணி, அகிலஇலங்கைச் சிறுபான்மைத் தமிழர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணி, அகில இலங்கைத் தமிழ் ஒ. ளத்த காங்கிரஸ் ஆகிய இயக்கங்கள் இதில் பங்குபற்றின. [அ]

# பொலநறுவையில் ஒருபுயல் அனுபவம்

**கோப்பாய் எஸ். சிவம்**

பொலநறுவை புதிய நகரம். கடந்த நவம்பர் மாதம் 23ம் தேதி இரவு ஒன்பது மணிக்கு மேல் இருக்கும் ஒன்பது மணி வானொலிச் செய்தியில் 'மட்டக்களப்பிலிருந்து சூறுவளி விலகிச்சென்றுவிட்டது' என்று கேட்ட நிம்மதியுடன் அவரவர் தமது கடமைகளில் ஈடுபட்டிருந்தனர் மழை மெல்லப் பிசு பிசுத்துக் கொண்டிருந்தது. காற்றுச் சிறிது சலசலக்கிறது.

அப்போது தெருவில் திடீரென்று ஒலிபெருக்கி அறிவித்தல் கேட்கிறது. காவற்படையினரின் வாகனம் "இன்றிரவு புயல் இங்கு வீசலாம். கவனமாக இருங்கள்" என்று அறிவிக்கிறது. எலோரும் பீதியுடன் சூறுவளியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொலநறுவைப்-புதிய நகர நீர்ப்பாசன இலாகாவின் பிரமச்சாரிகள் வசிப்பிடத்தில் நாம் ஒன்பது பேர் ஒன்றாகக் கூடி நிலைமையை அவதானித்துக்கொண்டு பீதியுடன் இருக்கிறோம். மின்சார இணைப்பு துண்டிக்சப்பட்டு விட்டது. பத்துமணி சுமாருக்குப்பலத்த மழையுடன் பெருங்காற்று வீச ஆரம்பித்தது. மெழுகு திரியும், சிறிய குப்பிவிளக்கும் காற்றில் அசைந்தாடி உயிரை விட்டுவிட, 'டோர்ச்' விளக்கின் ஒளியுடன் இருக்கிறோம். படிப்படியாகப் புயல அதிகரிக்கிறது. ஒவ்வொன்றாக மரங்கள் சரிந்து விழுவதும் கூரைகள் பிரிந்து காற்றில் பறப்பதும் மழை இரைச்சலினூடாகவும் காற்றின் 'உய்' என்ற கூச்சலினூடாகவும் கேட்கிறது.

## கோரத்தாண்டவம் ஆரம்பம்

நள்ளிரவு 12-45க்கு இயற்கையின் கோரத்தாண்டவம் ஆரம்பமாகிறது. புயலரக்கன் நர்த்தனமாடுகிறான் எந்த நேரம் எந்தமரம் எங்கு விழப் போகிறதென்று தெரியாது ஒருவரை ஒருவர் நெருங்கி அணைந்துகொண்டு நடுக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

நான்கு அறைகள் ஒருபுறமும், மறுபுறத்தில் நான்கு அறைகளும் நடுவில் சமையலறை, குளியலறை போன்றவற்றையும் கொண்ட அந்தப் பெரிய கட்டிடத்தையும் (நாங்கள் இருந்த 'சம்மறி') புயல் தாக்க ஆரம்பித்தது கிழக்குப் பக்கத்திலிருந்து வீசிய புயல் அந்தப்பக்கத்துக் கூரையை அப்படியே பிய்த்துக்கொண்டு போனது. நொறுங்கிய துண்டுகள் சிலிங்கையும் உடைத்துக்கொண்டு அறைகளுக்குள் விழுந்தன. மழை 'சொள சொள' வென்று உள்ளேகொட்டியது நாங்கள் மறுபுறத்திற்கு ஓடினோம். கண்ணுக்கு முன்னால் ஜன்னல் கதவுகளும், வாசல் கதவுகளும் 'மடார், மடார்' என அடித்துக் கண்ணாடிகள் சிதறின.

## பெட்டிகள் நீந்தின

அறைகளுக்குள் கட்டில்கள் மெத்தைகள், உடுப்புகள் பெட்டிகள் புத்தகங்கள் மற்றும் தஸ்தாவேஜுக்கள் போன்ற உடைமைகள் யாவும் மழை வெள்ளத்துள் நீந்தின. அவற்றை எடுக்கவும் முடியாது. நாம் வெளியே போகவும் முடியாது. புயல் சுழற்றி அடிக்கிறது. பேய்மழை பொழிகிறது. நள்ளிரவு ஒரே இருள் சூழ உள்ள விடுகள் அரசாங்க வசிப்பிடங்கள் இவற்றிலெல்லாம் கூரைகள் உடைகின்ற-மரங்கள் சரிகின்ற ஓசைகள் கேட்கின்றன, ஆங்காங்கே 'டோர்ச்லைட்'டுக்களின் ஒளிப்பொட்டுக்கள் மின்னின.

பாதிக் கூரையை இழந்த வீட்டில் மறுபகுதியில் நாம் நிற்கிறோம். எந்த நேரமும் கூரை தலையில் இடிந்து விழலாம். தூண்களை இணைக்கின்ற பெரிய 'கொங்கிறீற்' 'பீம்'களின் கீழ்வரிசையாக நிலைகொண்டோம். சற்றுக் குறைந்ததும் அறைகளுள் சென்று மேசைகளின் கீழ் பதுங்குகிறோம்.

## சூறுவளியின் 2ம் கட்டம்

இரவு 3-15மணிஅளவில்சுமார் இரண்டரை மணிநேர கோர தாண்டவத்தின்பின் புயல் சிறிது ஓய்கிறது. நாம் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொள்கிறோம் களையை மாற்ற எண்ணி தப்பியிருந்த ஒரு குக்கரைப் பற்ற வைத்து தேநீர் தயாரிக்கிறோம் தேநீர் குடிக்க ஆரம்பிக்கிறோம் மறுபடி நாலு மணியளவில் புயல் ஆரம்பமாயிற்று. இம்போது மறுபுறமாகச் சுழற்றி அடித்தது புயல். நமது கட்டிடத்தின் மறு பகுதியும் இனித் தாக்கப்படலாம் என்று எண்ணினோம், தேநீர் குடித்தது பாதி குடியாதது பாதி என்று போட்டுவிட்டு எதிரில் இருந்த ஒரு வீட்டிற்கு ஓடினோம். அது ஓட்டால் வேய்ந்திருந்ததால் அதிகம் தாக்கப்படவில்லை. ஆயினும் இரண்டு அறைகளில் ஓடுகள் உடைந்து வீழ்ந்து மழை வெள்ளம் வீட்டினுள் ஓடியது. அதிகாலை ஆறு மணி வரை இரண்டாம்கட்ட சூறுவளியைப் பார்த்துக்கொண்டு அங்கு நடுங்கிக்கொண்டிருந்தோம்.

ஏழுமணியளவில் மழையும் காற்றும் ஓய்ந்து வெளிச்சம் பரவிவர வெளியே வந்து நோக்கினோம். தெருவில் நடக்கிறோம். வீதிஎங்கும் வரிசையாக மரங்கள் விழுந்து கிடந்தன. அந்தப்பகுதியில் எல்லாவீடுகளுமே முழுமையாகவே அல்லது பகுதியாகவோ கூரை இழந்தவையாகக் காணப்பட்டன. சிறிய மண்வீடுகளும் தகரக் கொட்டகைகளும் முற்றாகச் சரிந்திருந்தன, பொருட்கள் நீரில் நீந்தின. ஆட்கள் நனைந்த கோலத்தில் பொருட்களை மீட்டுக்கொண்டிருந்தனர். பெண்களும் குழந்தைகளும் நனைந்துநடுங்கிக்கொண்டிருந்த காட்சி பரிதாபமாக இருந்தது.

## பராக்கிரம சமுத்திரம்

பராக்கிரம சமுத்திரம் அணை உடைத்துப் பெருகத் தயாராக இருநதது. தாழ்ந்த பகுதியில் குடியிருந்தவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை நடந்தது. அவர்களும் மற்றும் வீடிழந்தவர்களும் பச்சைத் தண்ணீருக்கும் வழியின்றி வீதிகளில் தவித்துக் கொண்டு நின்றனர். பள்ளிக்கூடம், காரியாயம் போன்ற பாரிய பொதுக் கட்டடங்கள் கூடக் கூரையிழந்திருந்தமையால் ஒதுக்கிடங்கள் தேடித் திரியவேண்டியிருந்தது.

தொலைபேசி இணைப்புவான் ஒலி அலைத் தொடர்பு யாவும் துண்டிக்கப்பட்டதோடு, பிரதான பாதைகள் யாவும் மரம் விழுந்துகிடந்ததால் வெளியிடங்களுடன் தொடர்பு எதுவும் இல்லை.

வெள்ளிக்கிழமை காலை சில உத்தியோயத்தர்கள் தமது வீட்டு நிலைமைகளைச் சிரமைப் பதைக் கூட விடுத்து பராக்கிரம சமுத்திரத்திற்கு நீர் பாய்ந்துகொண்டிருக்கும் அப்பன் கங்க - அங்கமடில்ல அணைக்கட்டை அடைப்பதற்கும், மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான அவசர காலக் கதவுகளைத் திறப்பதற்கும் ஓடினர். அதற்குப் புதியநகரப்பிரதேசத்திலிருந்து அணைக்கட்டுப் பாதையில் சுமார் ஐந்து மைல் தூரத்தைக் கடந்தாகவேண்டும் வாகனங்கள் எதுவும் போக முடியாமல் பாதை முழுவதும் வழிக்கு வழி மரங்கள் விழுந்துடடந்தன,

பொலன்நறுவ, கதுறுவெல, மன்னம்பிட்டி ஆகிய இடங்களிலும் மோசமான தாக்கம் இருப்பதை நாம் அவதானிக்க முடிந்தது எமது இந்த அனுபவம் மூலம் மட்டக்களப்பு கல்முனைப் பகுதியின் விளைவுகளை ஊகிக்க முடிந்தது. பொலநறுவைப் பகுதியில் மட்டும் பத்துக்கு மேற்பட்ட மரணங்கள் ஏற்பட்டன. புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்மால் இயன்றளவு உதவுவோமாக" [சி]

---

# "புலவர்மணிதுயர்நீங்குமுன் சூறுவளிப் பேரிடி"

## உரும்பராயில் அனுதாயம்

[யாழ்ப்பாணம்]

"ஈழத்தின் தலைசிறந்த தமிழறிஞர்களில் ஒருவரான புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை எதிர்பாராத விதமாகக் காலஞ்சென்றார் கிதைக்கவி செய்து கீர்த்திமிகப் பெற்றவரான புலவர்மணி கிழக்கிலங்கையின் அறிவுச்சுடர் மணியாக விளங்கியவர். புகழ்பூத்த புலவர்மணி அவர்கள் பிரிவுத்துயர் மாறுதிருக்கையிலேயே கொடும் புயலினாலும் பெருமழையினாலும் தாக்குண்டமக்கள் பலநூற்றுக் கணக்கில் அகால மரணமடைந்திருப்பது பேரிடியாகும் கிழக்கிலங்கையில் கூடுதலானவர்கள் இயற்கைக் கோளாறுகளினால் மரணம்அடைந்தமை துரதிர்ஷ்டவசமானதே"

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில்நடைபெற்ற பிரார்த்தனை வைபவத்தில் உரையாற்றிய பதில் அதிபர் திரு. அ பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. பஞ்சாட்சரம் தொடர்ந்து மேலும் பேசுகையில், 'எம்மைவிட்டுப் பிரிந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையினதும் சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளப்பெருக்கு முதலியவற்றினால் மரணமடைந்தவர்களதும் ஆன்மா சாந்தி பெற இறைவன் திருவருளை வேண்டிப பிரார்த்திப்பதேயல்லாமல் யாம் செய்யத்தக்கது வேறொன்றும் இல்லை. இலங்கையரசும், சமய சமூக சங்கங்களும், அறிஞர் பெருமக்களும் நிவாரணப் பணிகளில் துரிதமாய் ஈடுபட்டுவருவதைப் பாராட்டுவதுடன் நாமும் நம்மாலியன்ற உதவிகளை புரிவது முக்கியமாகும்'' என்றார்.

மாணவர்கள் திருமுறை ஓதியதனை அடுத்து மௌனஞ்சலிசெலுத்தப்பட்டது.

[உ]

---

# இடமாற்றம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் திரு. வி. பி சுந்தரலிங்கம் அடுத்த மாதம் முதலாந் திகதி தொடக்கம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றப் பெற்றுச் செல்லவுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக இவர் முல்லைத்தீவில் கடமையாற்றி வந்துளளார்

(நெல்-சி)

---

# மண்வெட்டி தாக்குதல் வழக்கில் எதிரி விடுதலை

(வேலணை)

மண்வெட்டியால் தாக்கிக் காயம் விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கொன்றில் சாட்சியமுரண்பாடு காரணமாக எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு வேலணை சுற்றுலா நீதிமன்றத்தில் ஊர்காவற்றுறை நீதவான் வி. ஜெகசோதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

மண்கும்பானைச் சேர்ந்த தம்பிஐயா குணநாயகம், பேரம்பலம் கோபாலபிள்ளை என்பவர்களை மண்வெட்டியால் வெட்டி காயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் செல்வரத்தினம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வழக்காளி தரப்பில் காயப்பட்டவர்களும் சம்பவத்தை நேரில் கண்டதாகக் கூறப்பட்டவர்களுமான வேலாயுதம், ஞானரத்தினம் ஆகியோர் சாட்சியம் அளித்தனர். இதைத் தொடர்ந்து சாட்சியமளித்தவர்களின் சாட்சியவாக்குமூலங்களில் முரண்பாடுகள் இருப்பதாகவும் எதிரியை விடுதலை செய்யுமாறு அவரின் சட்டத்தரணி விவாதித்தார்.

எதிரிதரப்பு சட்டத்தரணியின் சமர்ப்பணங்களைத் தொடர்ந்து எதிரியைவிடுதலை செய்வதாக நீதவான் அறிவித்தார். ஆயினும் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காக ஒருவருடகாலத்திற்கு சமாதானத்தைப்பேணுமாறு அதற்கான பிணையில் செல்லுமாறும் எதிரிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வழக்கின் வழக்காளி தரப்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜன்ட் நடராசாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி ப. கதிரவேலுவும், எதிரி தரப்பில் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தாவும் ஆஜராகியிருந்தனர்.

---

# ஆசிரியர்கள் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண கல்வி மாவட்டத்தில் கடமையாற்றிவரும் சுமார் 40 விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

அதே போன்று கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தசுமார் 40 தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்கள் எனத் தெரிய வருகின்றது. (அ)

---

# வாகனங்களுக்கு கட்டணம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பு மாநகரம் போன்று யாழ்ப்பாணத்திலும் வீதியில் தரித்துநிற்கும் வாகனங்களுக்குக் கட்டணம் அறவிடப்படவிருப்பதாக யாழ். மாநகர்சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், ஜனவரி மாதம் முதல் இத்திட்டம் அமுலுக்கு வரும் என்றும் அவர் கூறினார். [க-அ]

---


வல்வெட்டித்துறை நகரசபை

# இறைச்சிக்கடை, காலை குத்தகை, மரக்கறிச் சந்தை, மீன் சந்தை

தொண்டமானாறு

1-1-79 முதல் 31-12-1979 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளின் வியாபாரம் நடாத்தும் உரிமையின் குத்தகை, காலைக்குத்தகை, மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை, மீன்சந்தை தொண்டமானாறு ஆகியவற்றுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளாக 15-12-78 முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| வியாபாரம் | கடை இல. | 1978-ம் ஆண்டு ஏற்றுக் கொண்ட தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக் கடை | 6 | 5750/- | 100-00 | 15-00 |
| 2. வண்டி வான் காலைக் குத்தகை | | 3010/- | 25-00 | 10-00 |
| 3. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | | 22750/- | 150-00 | 25-00 |
| 4. மீன்சந்தை தொண்டமானாறு | | 1810/- | 25-00 | 10-00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பெயரில் 13-12-1978 நண்பகல் 12 மணி வரையும் வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கடபடவேண்டும். கேள்விப் படிவக்கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித்தரப்படும் கேள்வி வைப்புப்பணமும் படிவக் கட்டணமும் ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக்கடித மூலம் அனுப்பப்படலாம். எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடித உறையில் இடது மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடவேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வல்வெட்டித்துறைநகரசபைவிசேட ஆணையாளருக்குண்டு 1978-ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்குக் குறைந்த கேளவிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்
ஜி. எஸ். கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
வல்வெட்டித்துறை

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,

4-12-1978.

0984

# "மேற்கு நாடுகளுடன் அல்ல பாரதத்துடன் சேரவிருப்பம்"

## சென்னையில் ஸாம்பிய பிரதமர்

சென்னை, டிச 5

"மேற்கு நாடுகளைச் சாராமல் பாரதத்தைச் சார்ந்திருக்கவே ஸாம்பியா விரும்புகிறது என்று ஸாம்பியப் பிரதம மந்திரி திரு. டேனியல் நிலோ சென்னையில் தெரிவித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் "தென்னாபிரிக்கா" என்னும் பொருள்பற்றி அவர் உரைநிகழ்த்தினார்.

### தொழில்துறை வாய்ப்பு

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "ஸாம்பியாவில் தொழில்துறை முதலீடு செய்வதற்கு பாரத நாட்டவர் முன்வரவேண்டும். தற்போது ஸாம்பியாவில் 3500 பாரதத்தவர் வேலைபார்க்கிறார்கள். பாரத டாக்டர்கள் விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், ஆகியோருக்கு ஸாம்பியாவில் நிறைய வேலைவாய்ப்புகளுண்டு என்றார்"

ஸாம்பியப் பிரதமர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1955 1957ம் ஆண்டுகள் கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத் துணைத் தலைவர் திரு. தாமோதரம் உரைநிகழ்த்துகையில் பாரதத்திற்கும் ஸாம்பியாவுக்கும் இடையே வரலாற்று, கலாச்சார, சமயத் தொடர்புகள் நீண்டகாலமாக உண்டு" என்றார் [உ]

## இலங்கை புயல் நிவாரணம்:

# தமிழக செஞ்சிலுவைச் சங்கமும் உதவுகிறது

சென்னை, டிச. 5

இலங்கையில் சூறாவளி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு மாநிலப் பிரிவும் முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 100 தொன் அரிசியும் ஒரு தொன் பிஸ்கட்டுகளும் அனுப்பிவைக்கப்படும் என தமிழ்நாடு மாநில செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும் உதவி வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. (உ)

பரிசோதனைக் குழாயில்

# செயற்கைக் குளிகைமூலம் சிசு உருவாக்கலாம்"

## பிரி. ஆராய்ச்சியாளர் அறிவிப்பு

லண்டன், டிச. 5

பரிசோதனைக் குழாய் குழந்தை தொடர்பாக பிரிட்டனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் புதியமுறை ஒன்றினை அறிந்துள்ளார்.

ஆண் தாதுக்குப் பதிலாக செயற்கைக் குளிகை ஒன்றைப் பெண்ணின் சினையுடன் சேர்த்து கருப்பைக்குள் செலுத்தினால் சிசு உருவாக்க முடியும் என்று இந்த ஆராய்ச்சியாளர் தெரிவிக்கிறார். பெற்பிக் செபோ என்பவரே பிரஸ்தாப ஆராச்சியாளராவார். [உ]

# சென்னை பல்கலைக்கழகத்தில் குஜராத், பஞ்சாபி பிரிவுகள்

சென்னை, டிச 5

சென்னை பல்கலைக்கழகத்தில் பஞ்சாபி, குஜராத் மொழிப் பிரிவுகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

பஞ்சாப், குஜராத் மாநிலங்களுடன் செய்துகொள்ளப்பட்ட பரஸ்பர ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வருடாந்த செலவாகத் தமிழ்நாடு அரசு அரை 46,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது [உ]

# எகிப்தின் புதிய யோசனையை இஸ்ரேல் நிராகரித்தது

லண்டன, டிச. 5

வாஷிங்டனில் தடைப்பட்ட மத்திய கிழக்குப் பிரச்னை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எகிப்து கடைசியாகச் சமர்ப்பித்த ஆலோசனையை இஸ்ரேல் நிராகரித்துள்ளது. இப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிய தமது பதிலை இஸ்ரேலியப் பிரதமர் திரு பெகின் நேற்று அனுப்பிவைத்தார்.

இது குறித்து திரு. பெகின் அளித்த பதிலின் விபரமோ, எகிப்திய ஜனாதிபதி சதாத்தின் விளக்கத்தின் விபரமோ வெளியிடப்படவில்லை.

எனினும் எகிப்தின் புதிய ஆலோசனையை ஏற்கமுடியாதென்ற இஸ்ரேலிய அமைச்சரவையின் முடிவை பிரதமர் திரு. பெகின் வலியுறுத்தியுள்ளார்.

எகிப்தின் புதிய ஆலோசனையை ஏற்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார் (உ)

# பாதுகாப்புச் சபையைஉடன் கூட்ட ஆபிரிக்க நாடுகள்கோரிக்கை

வாஷிங்டன், டிச. 5

நமீபியாவுக்கான பொதுத் தேர்தலை தன்னிச்சையாக நடத்த முற்பட்டிருக்கும் தென்னாபிரிக்கா மீது சகல நிர்யோகத் தடையையும் அமுல்படுத்துமாறு ஆபிரிக்க நாடுகள் ஐ. நா. பாதுகாப்புச்சபையைக் கோரியுள்ளது.

15 நாடுகள் அங்கம்வகிக்கும் பாதுகாப்புச்சபை தேர்தல் நடத்துவதுஎன்ற முடிவை ரத்துச்செய்யுமாறு கடந்த மாதம் விடுத்த வேண்டுகோளை தென்னாபிரிக்கா நிராகரித்திருந்தது.

உடனே பாதுகாப்புச்சபையைக் கூட்டுமாறு ஆபிரிக்க நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

### தேர்தல் ஆரம்பம்

இது இவ்வாறு இருக்க, பல நாடுகளின் எதிர்ப்புக்கும் மத்தியில் நமீபியத் தேர்தல் நேற்று ஆரம்பமானது.

நேற்றைய வாக்களிப்பு விறுவிறுப்பாக நடந்தது என்று தென்னாபிரிக்க அரசு அறிவித்தது.

தென்னாபிரிக்காவில் உள்ள சுவாஸ்போ இயக்கம் இத்தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளது. (உ)




நாகம்ஸ்
(கல்லூகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - தேவிகா
சாந்தி

Rio (Jaffna)
Daily 4 Shows
CHEYENNEY SOCIAL CLUB
((Color-Scope-Cowboy

## இன்று சாரணர் மரம்நாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்சாரணர்கிளைச்சங்கம் யாழ்ப்பாணம்சாரணராளர்சங்கம் என்பன இன்று புதன்கிழமை பிற்பகல் மரம் நாட்டுவிழா நடத்தவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிமண்டபத்தில் இவ்விழா நடைபெறும்.

இவ்விழாவில் கலந்து கொள்ளும் கல்லூரி சாரணக்குழுக்களுக்கு தொழில் அதிபர் திரு கனகராஜா இலவசமாக மரக்கன்றுகளை வழங்குவார்.

இவ்விழாவிற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமை வகிப்பார். (உ)

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்
குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே
திரையிடப்படுகின்றது
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - எஸ். எஸ். ஆர்.
கிரிஜா - ரி. ஆர். ராஜகுமாரி - கண்ணம்பா
நடித்த
மனோகரா (புதிய பிரதி)

2-வது ஹவுஸ் புல் வாரம்!
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு
நடித்த
(இரு வேடங்களில்)
சபாஷ் மீனா (புத்தம் புதிய பிரதி)

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ஏமாற்றத்தைத் தவிர்க்க சிக்கற்றுக்கு முந்துங்கள்
2-வது ஜனத்திரள் வாரம்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மணி' அதிசிறந்த கராட்டிச் சித்திரம்

ராணி [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி. ஆர். - பத்மினி
வீரப்பா - தங்கவேலு
நடித்த
விக்கிரமாதித்தன் (புதியபிரதி)

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
6 வது வெற்றி வாரம்
ஜெய் சிவராம் ஜெய் சந்திரகலா ஸ்ரீ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ [யாழ். நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m,
SPECIALIST
Full action Film

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 20-ந் திகதி
புதன்கிழமை
(6-12-78)

**மேடம்:**— தந்தை பெருமை மூலம் தடுமாற்றம் தென்படும், கண்துடைப்பு வேலைகள் நடைபெறும், கவனம் செலுத்தவும், பெருமையைப் பேணி நடக்கவும்.

**இடபம்:**— இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும், சிலருக்குப் புதிய வாகனம் கொள்வனவு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படும், மாதுருவழி ஆதரவும் கிடைக்கும்.

**மிதுனம்:**— வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம் பெறும், புத்திரர்களால் மகிழ்ச்சியிண்டு, பெரியஇடத்து தொடர்பு பெருமையைத் தேடித்தரும்

**கடகம்:**— பூமிப் பிணக்கால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும், எதிலும் உணர்ச்சிவசப்படாது இருக்கவும்.

**சிங்கம்:**— இலட்சியவாதிகள் பூரிப்படைவர், காதலர் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும், மதிப்பு உயரும், நல்லநாள்.

**கன்னி:**— சிந்தையில் தழப்பநிலை தென்படும, மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம், சிலர் கடன் படவும் நேரிடலாம்.

**துலாம்:**— பூமியால் லாபம் உண்டு, சிலருக்கு பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கலாம், பிதாவழிச் சுகமும உண்டு.

**விருச்சிகம்**- புதிய முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும், தொழில்துறையிலும மகிழ்ச்சி தென்படும்.

**தனுசு:**— உழைப்பினால் முன்னேற்றம் தென்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, உயர்கல்வியில் ஈடுபடுவோருக்கு உற்சாகதினம.

**மகரம்:**— எதிர்பாராத செலவினங்களுக்கு இடமுண்டு சிலர் வாழ்க்கையில கடன் படவும் நேரிடும், தொழில் துறையிலும் கவனம் செலுத்தவும.

**கும்பம்:**— துன்பத்தின் ரேகைகள் படரும், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றத்திற்கிடமுண்டு தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்.

**மீனம்:**—: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம, நல்லநாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பரு. நடராசா சிலை அடுத்தமாதம் நிறுவப்படும்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைத் தலைவராக 25 வருடகாலமாக இருந்தவரும் சட்டத்தரணியுமான அமரா ந நடராசாவுன் உருவச் சிலையை, தமிழ் நாட்டைச் சேர்ந்த சிற்பி செதுக்கி முடித்துள்ளார்.

இச்சிலை அடுத்த மாதம் நடுப்பகுதியில் நகரசபை அலுவலகத்திற்கு முன்பாக நிறுவப்படவுள்ளது. யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளாராம்.

# தேசியசேவைத்திட்டங்களுக்கு 2 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேவைத் திட்டங்களுக்கெனத் தேசிய இளைஞர் சேவை மன்றம் இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியைக்கொண்டுயாழ். மாவட்டத்தில் ஆறு திட்டங்கள் செயற்படவுள்ளன. தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அமைப்பின்மூலம் இத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பாதை அமைத்தல், வாய்க்கால் வெட்டுதல், விளையாட்டு மைதானம் அமைத்தல், மரம் நாட்டு இயக்கம் முதலானபல தரப்பட்ட வேலைகள் அடங்கும் நல்லூர், கிளிநொச்சி, சாவகச்சேரி, கோப்பாய், காங்கேசன்துறை, மானிப்பாய் முதலான தேர்தல் தொகுதி மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்களாம்.

மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் இத்திட்ட வேலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவில் பஸ் விபத்து: இருவர் காயம்

(முல்லைத்தீவு)

பஸ் மோதி இருவர் காயமடைந்தனர்.

முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய்க்கு இரவு சென்ற பஸ்ஸிலேயே இவர்கள் மோதுண்டனர்.

முகைதீன் சலிம், சம்சுதீன் ராஜமுகமது ஆகிய இருவரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விரையப் பட்டனர்,

முல்லைத்தீவு பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (உ)

# வாய்பேசாத இருவருக்கும் அபராதம்

[யாழ்ப்பாணம்]

வாகனப் போக்கு வரத்துச் சட்டத்தைமீறி "லைட்" இல்லாமல் இரவில் சைக்கிளில்சென்ற இரு வாய்பேசமுடியாத இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ் நீதவான் திரு. விரரத்ன முன்னிலையில், இவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். ஒவ்வொருவராக பெயர் கூப்பிடப்பட்டது.

இருவரும் சென்றபோது, தனித்தனியே, "குற்றவாளியா? சுற்றவாளியா?" எனக் கேட்கப்பட்டபோது அவர்கள் கையால் சைகை மூலம் காட்டினார்கள்.

இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. கேசவன், அவர்கள் இருவரும் வாய்பேசமுடியாதவர்கள் என நீதவானிடம் கூறினார்.

அவர்கள் கையால் காட்டுவதை ஏற்கமுடியாதெனக் கூறிய நீதவான் சட்டத்தரணிக்கு அதிகாரம் வழங்கி எழுத்துமூலம், தருமாறு கூறினார்.

சட்டத்தரணி கே. கேசவன் எழுத்துமூலம், அவர்கள் குற்றவாளிகள் என அத்தாட்சிப் படுத்தியபின், தலா 35 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேதினம் 59 பேருக்கு தலா 35 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. [க-அ]

சுதந்திர வர்த்தக வலயம்:

# இலங்கைத் தூதுக்குழு இந்தியா வந்தது

சென்னை, டிச. 5

இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும் சுதந்திர வர்த்தக வலயத் திட்டத்திற்கு இந்திய முதலீட்டாளர்களை ஒப்பந்தம் செய்யும்பொருட்டு இலங்கைப் பிரதிநிதிகள் குழு ஒன்று பாரதம் வந்துள்ளது புதுடில்லிக்குச் செல்லும் வழியில் நால்வர்கொண்ட இப் பிரதிநிதிகள் குழு நேற்று சென்னை வந்தது.

புதுடில்லியில் இந்திய முதலீட்டாளர்களுடன் இக்குழு பேச்சுவார்த்தை நடத்தும். (உ)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டி ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு. மு க சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வி செல்வி தயாநிதியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெறவிருக்கிறது.

சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், வடமாநில வித்தியாதிபதி திரு தி மாணிக்கவாசகர், திருமதி ஞானம்பிகை மாணிக்கவாசகர் ஆகியோர் கலந்துகொள்வர்.

செல்வி தயாநிதி தையிட்டி "சிலம்பொலி க்ஷேத்திரா" நிறுவன நடன ஆசிரியை செல்வி ஜெயபத்மினி சின்னத்துரையின் மாணவியாவார். [அ]

## ஆசிரியர் சங்க கிளை நிர்வாகிகள்

(உடுப்பிட்டி)

இலங்கைத் தமிழர்-ஆசிரியர் சங்க பருத்தித்துறைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் தலைவர் திரு ஆ. க. மாணிக்கம்தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. க. மாணிக்கம், செயலாளர்: திரு. சி. வின்சென்ற், பொருளாளர்: திரு. த. வடிவேலு. (உ)

## ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானம்

[உடுப்பிட்டி]

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 'கல்பொல்லை' மாதிரிக் கிராமத்திற்கான சகல வேலைகளுக்கும் சிரமதான முறையில் பூரண ஒத்துழைப்பு வழங்க கரவெட்டி பௌத்தசங்கம் தீர்மானித்துள்ளதாக கரவெட்டி பௌத்த சங்க உபதலைவர் திரு. செந்திவேல் அறிவித்துள்ளார். (உ)

## தமிழ்க்காங்கிரஸ் வழக்கு:

# இடைக்கால தடை உத்தரவு விசாரணை இன்று ஆரம்பம்!

### தீர்ப்புவரை மாநாட்டிற்கு தடைவிதித்து கட்டாணை!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை தடைசெய்யுமாறு அணைக்கப்பட்ட மனுமீதான இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பான விசாரணை இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆரம்பமாகும்.

இந்த இடைக்கால தடை உத்தரவு விசாரணை நடைபெறும்வரை தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை நடத்தக்கூடாதென நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தால் கட்டாணைபிறப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று இவ்வழக்கு எடுக்கப்பட்டது.

நல்லூர் கல்யாண மண்டபத்தில் இம்மாதம் 10ம் திகதி நடைபெறவிருக்கும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டை தடைசெய்யுமாறு கோரி நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு ஆகியோர் மனுவொன்றை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), திரு. ரி. சங்கரப்பிள்ளை, திரு. ரி. பரமானந்தராசா, திரு. எம் கே சுப்பிரமணியம் ஆகியோருக்கு எதிராக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இரண்டாவது தினமாக நேற்று இவ்விசாரணை எடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் 3-ம் மனுதாரரான வட்டுக்கோட்டை எம் பி திரு. ரி. திருநாவுக்கரசு சமுகமளித்திருந்தார்.

1-ம் எதிர்மனுதார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] 2-ம் எதிர்மனுதார் திரு ரி சங்கரப்பிள்ளை, ஆகியோரும் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனர்.

1 ம், 2 ம் மனுதார்களும், 3 ம், 4 ம் எதிர் மனுதார்களும் நேற்று நீதிமன்றத்திற்கு வரவில்லை.

மனுதார் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். கதிரவேலுப்பிள்ளை, சி. நாகராசா, எஸ். ருத்திரமூர்த்தி, எஸ். வரதராசா, ஆர். விஸ்வநாதன், செல்வி. பொன்னையா ஆகியோர். சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். ஆர். கனகநாயகம், எம். எஸ். சுந்தரலிங்கம், எஸ். செல்வராசா, செல்வி. அபிமணசிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டிற்குள் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

மனுமீதான இடைக்கால தடை உத்தரவு விசாரணை முடியும்வரை எதிர் மனுதாரர்கள் டிசம்பர் 10 ம் தேதியோ, அதற்கு முன்பின்போ, யாழ்ப்பாணத்தில் அல்லது வேறு இடத்தில் தமிழ்க்காங்கிரஸ் வருடாந்த மாநாட்டைக் கூட்டவோ, நடாத்தவோ முயற்சி செய்யக்கூடாதென நீதவான் கட்டாணை பிறப்பித்து, இடைக்கால தடை உத்தரவு விசாரணை நாளை (புதன்கிழமை) காலை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுமென்று கூறினார்.

கட்டாணை பிறப்பிக்கப்பட்ட அறிவித்தலை பெறுவதாகவும், நாளை இடைக்கால தடை உத்தரவு விசாரணைக்கு ஆயத்தமாக இருப்பதாகவும் எதிர் மனுதார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் கூறினார்.

3 ம், 4 ம் எதிர் மனுதார்கள் நாளை நீதிமன்றத்தில் சமுகமளிப்பார்களென்றும், சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தெரிவித்தார்.

இக்கட்டாணை அறிவித்தல் 1 ம், 2 ம் எதிர் மனுதார் முன்னிலையில், வழங்கப்பட்டபோது அறிவித்தலை பெறுவதாகவும், நாளை விசாரணைக்கு வருவதாகவும் தெரிவித்தனர். (க.

### வித்திக்கு மாணவர் வரவேற்பு

(கோண்டாவில்)

யாழ்ப்பாணத்தில் மருத்துவபீடம் அமைப்பதற்கு உபவேந்தரான பேராசிரியர் வித்தியானந்தன் பெருமுயற்சி எடுத்தார்.

உப வேந்தராக நியமிக்கப்பட்ட திரு. எஸ். வித்தியானந்தனுக்கு, யாழ். பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் மாணவ மன்றத் தலைவர் திரு. எஸ். ஜெயபாலன் மேற்கண்டவாறு கூறினார்

பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மாணவர்கள் மாலை சூட்டி வரவேற்றார்கள்.

இராமநாதன் மண்டபத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் மாணவர்கள் திரு. வித்தியானந்தனை வரவேற்றுப் பேசினார்கள்.

இவ்வளவு காலமும் ஒரு கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த வளாகம், இன்று தனிப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. தொடர்ந்து சுதந்திரமாக இயங்கக்கூடிய வாய்ப்பாகும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

உப வேந்தர் வித்தியானந்தன் மாணவர்களுக்கு நன்றி தெரிவித்தார். [க]

### சமையல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

#### சமையல் பாத்திரங்கள்

சூறாவளியினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களுடைய மாதவருமானத்தைக் கவனத்திற்கெடுக்காமல் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு நூறு ரூபாய் உடனடியாக உதவிப்பணம் வழங்குமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கல்விப்பகுதியைச் சேர்ந்த பொறியியலாளர், வித்தியாதிபதிகள். வித்தியாதரிசிகள் ஆகியோர் நான்கு குழுக்களாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று சேதம்பற்றிய விபரங்களையும் மதிப்பீடுகளையும் திரட்டிவருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் சேவைபுரிந்து வருகின்றனர். வீதிகளில் விழுந்துகிடக்கும் மரங்களை அகற்றும் பணியிலும் இராணுவவீரர் ஈடுபட்டுள்ளனர்.

#### வங்கிகள்

கல்முனை உட்பட பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு சில வங்கிக்கிளைகள் தவிர இதர கிளைகள் பணியாற்றத் தொடங்கியிருக்கின்றன, மக்கள்வங்கியின் 21 கிளை அலுவலகங்களின் கூரைகள் சேதமடைந்துள்ளன வங்கி ஊழியரின் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு வட்டியில்லாமல் கடன் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

### வவுனியாவிலிருந்து உணவு, உடை

வெள்ளத்தினாலும், புயலினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக வவுனியாவில் சேகரிக்கப்பட்ட உணவு, உடை என்பன வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரத்தினால் திருகோணமலையில் கையளிக்கப்பட்டு, அங்குள்ள தமிழ் இளைஞர்களின் துணையுடன் வள்ளங்கள்மூலம் மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [கே-அ]

## படுகொலை, பயங்கர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மின்னல் வேகத்தில் துப்பாக்கியால் பொலிஸாரை நோக்கி சுட்டபோது, பொலிஸார் காயமடைந்தனர். திடீரென ஒரு இளைஞர், பொலிஸ் கான்ஸ்டபிளிடமிருந்த யந்திரத் துப்பாக்கியைப் பறித்தெடுத்து சுட்டுவிட்டு, பணப்பைகளையும் கைப்பற்றிக்கொண்டு, அதே வாடகைக் காரில் ஏறி மறைந்துவிட்டனர்.

றிசேர்வ் பொலிஸார்களான சச்சிதானந்தன், ஜெயரத்தினம் ஆகிய இருவரும், மக்கள் வங்கியில் காவல் செய்துகொண்டிருந்தனர் என்றும் பொலிஸ் கான்ஸ்டபிளான இங்லி பெரேரா வங்கியிலிருந்து, பிராந்திய தலைமைக் காரியாலயத்திற்கு காரில், பணத்தைக் கொண்டு செல்வதற்கு காவலாக அங்கு யந்திர துப்பாக்கியுடன் வந்திருந்தார் என்றும் கூறப்படுகிறது.

பொலிஸ் கான்ஸ்டபிள் இங்லி பெரேரா அவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமாகி இரத்தவெள்ளத்தில் கிடந்தார்.

அவசர அவசரமாக குற்றுயிராக இருந்த மற்றும் இரு பொலிஸ்கான்ஸ்டபிள்களை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லும் வழியில் ஒருவர் மரணமானார், மற்றொரு கான்ஸ்டபிள் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் 17ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது

#### சாரதி ஓடினார்

வாடகைக்காரில் ஏறி புறப்பட ஆயத்தமாக இருந்த கார் சாரதி, துப்பாக்கிவெடிச் சத்தங்களைக் கேட்டதும், காரிலிருந்து இறங்கி ஓடிவிட்டதாகவும் அதே காரை இளைஞர்கள் பாவித்து கொள்ளையடித்த பணத்தைக் கடத்தியதாகவும் கூறப்படுகிறது

#### பொலிஸ் அதிபர் விரைவு

ஸ்தலத்திற்கு யாழ்பொலிஸ் அதிபர் எகொடபிட்டிய விரைந்து இடத்தைப பார்வையிட்டார் யாழ் குற்றத் தடுப்பு பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்

#### வாகனங்கள் சோதனை

திருநெல்வேலியிலிருந்து செல்லும் சகல பாதைகளிலும் வாகனங்கள பலத்த சோதனைக் குட்படுத்தப்பட்டன, திருநெல்வேலிபகுதியிலுள்ள வீடுகளும் சோதனையிடப்பட்டன

#### பொலிஸார் அஞ்சலி

கொலையுண்ட இருபொலிஸ் கான்ஸ்டபிள்களின் சடலங்களும் ஆஸ்பத்திரிக்குகொண்டு வரப்பட்டன, பெருந்தொகையான பொலிஸார் ஆஸ்பத்திரிக்குவந்து அஞ்சலிசெலுத்தினார்கள்,

#### பெண் மயக்கம்

சம்பவம் நடந்தபோது நகை அடைவு எடுக்க வந்த பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதும் அதிர்ச்சியினால் மயக்கமடைந்து விழுந்தார், அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது,

#### 5 தடவை சுட்டனர்

பணத்தைக் கொள்ளையடித்தபின், இளைஞர்கள் காரில் செல்லும்போது, சந்தியில் வானத்தை நோக்கி 5 தடவை சுட்டு எச்சரித்துவிட்டுச் சென்றார்கள் என்றும் கூறப்படுகிறது

ஸ்தலத்தில், பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. பொலிஸார் புகைப்படங்கள் எடுத்தனர். கைவிரலடையாளம் எடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் நிருபர்கள்)

## யாழ். நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ யாழ். பஸ் நிலையத்துக்கும் மற்றும் யாழ் நகரின் முக்கிய இடங்களுக்கும் உடனடியாகவே நேரில் சென்று நிலைமையைச் சமாளித்து அமைதியை ஏற்படுத்தி யாழ். நகர மக்களின் உளம் நிறைந்த வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டார்.

திருநெல்வேலி மக்கள் வங்கிக்கிளையில் நேற்று முற்பகல் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டுச் சுமார் பத்துலட்சம் ரூபாய்கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு வாகனத்தில் யாழ். நகரிலுள்ள சாராயத்தவறணை முன்வந்திறங்கிய காற்சட்டை அணிந்த ஒரு கோஷ்டியினர் தவறணைக்குள் நுழைந்து அங்கிருந்த ஒரு இளைஞனைத் தாக்கிக் காயப்படுத்தியதுடன் பணத்தையும் எடுத்துக் கொண்டதுடன் சாராயப் போத்தல்களையும் அடித்து நொறுக்கியதாகவும் அருகேயுள்ள கடைகளையும் தாக்கியதுடன் பஸ் நிலையத்துக்கும் வந்து அங்குநின்ற பிரயாணிகள் சிலரையும் தாக்கத் தொடங்கியதாகவும் வீதியில் நின்ற வாகனங்களையும் சென்ற வாகனங்களையும் தாக்கியதாகவும் வீதிகளில் மக்கள் கிலிகொண்டு ஓடத்தொடங்கியதுடன் கடைக்காரர்களும் கடைகளை அடித்துமூடிவிட்டதாகவும் பல புகார்கள் அரசாங்க அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். எம். பி. திரு. யோகேஸ்வரனின் பனைவியாரும், சங்கானை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளரும் அரசாங்க அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையைஎடுத்துக்கூறினார்.

உடனடியாகவே திரு. யோகேஸ்வரன் வீட்டுக்குச் சென்று நிலைமையைத்தெரிந்து கொண்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ பஸ் நிலையத்துக்கும் தவறணைக்கும் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார், தவறணையில் காயமடைந்த இளைஞனையும் அவர் ஆஸ்பத்திரியில் கொண்டுசென்று அனுமதித்தார்

பொலிசார் சிவில்உடையில் வந்து தாக்குவதாக அரசாங்க அதிபருக்கு புகார்செய்யப்பட்டது பஸ்நிலையத்திலும் அதைசூழ உள்ள இடங்களிலும் அமைதிகுலைவதாகத் தகவல் கிடைத்ததும் திரைப்பட மாளிகைகளிலும் படக்காட்சிகள் நிறுத்தப்பட்டு படமாளிகைகள மூடப்பட்டன.

அரசாங்க அதிபரின் முயற்சியின்பின் வீதிகளில் ஜனநடமாட்டமும் பஸ்போக்குவரத்துச் சேவையும் மீண்டும் ஆரம்பித்தன மூடப்பட்ட கடைகளும் மீண்டும் படிப்படியாக திறந்தன.

## மரண அறிவித்தல்

### கந்தையா சச்சிதானந்தம் (R. P. C.)

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த கந்தையா சச்சிதானந்தம் (றிசேவ் பொலிஸ்) அகால மரணம் அடைந்தார். இவர் கந்தையா புவனேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் சிவஞானசூரியர் (R. M. P., கேகாலை), ஜெயபாலகணேசன் மின்சாரசபை, யாழ்ப்பாணம்), சிவநேசன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), நித்தியானந்தம் (மொஸ்கோ) இராஜேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) சத்தியசீலன் (சிறுப்பிட்டி சைவ வித்தியாசாலை மாணவன்), பரிமளாதேவி, ரஞ்சினிதேவி, விமலாதேவி, சுசீலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-12-78) புதன்கிழமை பிற்பகல் நடைபெறும். 8988

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 03-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Telegram Eelanaadu Telephone 889, Registered as a Newspaper in SriLanka.